**SC NO.19/2013** **Date:28.02.2025**

**கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் ), காஞ்சிபுரம் (பக்கம் )**

**சாட்சியாகிய திரு. சஞ்சய் என்ற Pw13 நபரின் வாக்குமூலம் (1876ம் ஆண்டின் 10 விதியின் Tr.A.Pachaiyappan, இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம்**

**செய்யப்படுகிறது.**

**பெயர் - திரு. சஞ்சய்**

**த/பெ, - திரு. ஹரிகோபால்**

**வயது - 52/2025**

**தொழில் - சேத மதிப்பீட்டாளர்**

**முதல் விசாரணை:**

நான் தற்போது காஞ்சிபுரம் வட்டம், செவிலிமேடு வேதாச்சலம் நகரில் குடியிருந்து வருகிறேன். நான் வாகன சேத மதிப்பீட்டாளராக பணிபுரிந்து வருகிறேன். 07.08.2009 அன்று காஞ்சி தாலுக்கா குற்ற எண்.809/2009 என்ற வழக்கில் TN 01 R 4115 என்ற டெம்போ டிராவலர் ஆம்புலன்ஸ் வாகனம் சேதம் அடைந்துள்ளதாகவும் அதை மதிப்பீடு செய்ய 17.08.2009 அன்று காஞ்சி தாலுக்கா போலிசார் அழைத்தார்கள். காவல் நிலையத்திற்கு முன்பாக அந்த வாகனம் இருந்தது. அந்த வாகனத்தில் இருந்த 13 கண்ணாடிகள் உடைக்கப்பட்டிருந்தது. சேதம் அடைந்த வாகனத்தை நான் புகைப்படம் எடுத்திருந்தேன். அன்றைய தேதியில் சேதத்தின் மதிப்பு ரூ.15,000 இருக்கும் என்று சான்று வழங்கினேன். நான் வழங்கிய சேத மதிப்பீடு சான்று அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது. புகைப்படங்கள் குறியீடு செய்கிறேன். அந்த புகைப்படங்கள் சா.பொ.1 (வரிசை) (14 எண்ணம்).

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

மறு விசாரணை இல்லை.

**SC NO.19/2013** **Date:28.02.2025**

**கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் ), காஞ்சிபுரம் (பக்கம் )**

**சாட்சியாகிய திரு. சேகர் என்ற Pw12 நபரின் வாக்குமூலம் (1876ம் ஆண்டின் 10 விதியின் Tr.A.Pachaiyappan, இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம்**

**செய்யப்படுகிறது.**

**பெயர் - திரு. சேகர்**

**த/பெ, - திரு. கண்ணியப்பன்**

**வயது - 64/2025**

**தொழில் - கிராம உதவியாள் (ஓய்வு)**

**முதல் விசாரணை:**

நான் தற்போது காஞ்சிபுரம் வட்டம், செவிலிமேடு கிராமம், மாரியம்மன் கோயில் தெருவில் வசித்து வருகிறேன். செவிலிமேடு கிராம உதவியாளராக பணிபுரிந்து ஓய்வு அடைந்துவிட்டேன். இந்த வழக்கு விவரம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் 1ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்து அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு அனுமதி அளித்ததன் பேரில் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

கடந்த 02.09.2009 அன்று காஞ்சி தாலுக்கா குற்ற எண்.809/2009 பிரிவு 147, 148, 341, 294(பி), 120(பி), 307 இ.த.ச மற்றும் 3(1) of TNPPDL Act வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரி ஸ்ரீதர் என்பவரை விசாரிக்க வேண்டி என்னையும் கிராம நிர்வாக அலுவலரையும் அழைத்ததன் பேரில் காஞ்சி தாலுக்கா காவல் நிலையம் சென்று எங்கள் முன்னிலையில் எதிரி ஸ்ரீதர் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நாங்களும் பன்னீர் செல்வம் என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்துவிட்டு தற்போது எதிரிக்கு பயந்து பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.